REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் 1 அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 168

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: தைமீ 7உ. புதன் (20—1—54) ★ ★ ★ வெளியூர்: தைமீ 8உ. வியாழன் (21—1—54)

யூனியன் ஆட்சி மீது ம. பி. பாய்ச்சல்!

—(:)—

முன் நாள் முடிவை மாற்றினதற்குக் கண்டனம்

—(:)—

உருக்குத் தொழிற்சாலை ஏற்பாட்டில் வங்கம், பீகார், ஒரிசா, ம. பி. மாநிலங்களிடையே பூசல்!

மத்திய சர்க்காருக்கு ரவி சங்கர் சுக்லாவின் அறைகூவல்

நாகபுரி, ஜன. 20—

நான் பதவியில் இருந்தாலும், இல்லாமற் போனாலும், நிறுவ இருக்கும் உருக்கு இரும்புத் தொழிற்சாலை விவகாரத்தில், மத்தியப் பிரதேசத்திற்கு ஏதாவது அநீதி இழைக்கப்படுமானால், அதை, நான் பொதுமக்களுக்கு முன்பாக அம்பலப்படுத்துவேன்."

"உருக்கு இரும்புத் தொழிற்சாலை ஏற்பாடு, மத்தியப் பிரதேசத்திற்கு ஜீவ மரணப் பிரச்னையாகும். நான் உயிரோடு இருந்தாலும், இல்லாமற் போனாலும், இந்த மாநிலத்திற்கு அநீதி செய்யாத ஒரு நிலைமையே நான் காண விரும்புகிறேன்." —முதல் மந்திரி பண்டிட் ரவி சங்கர் சுக்லா.

"யூனியன் சர்க்காரிடமிருந்து மாற்றாந் தாய் போக்கையே மத்தியப் பிரதேசம் எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இயற்கை வளம் குன்றியும், ஏழ்மை கொண்டும் உள்ள சிறு சிறு மாநிலங்கள் பெறுகின்ற சலுகை அளவுகூட யூனியன் சர்க்காரிடமிருந்து மத்தியப் பிரதேசத்தால் பெற முடியவில்லை."

"மத்தியப் பிரதேச சர்க்கார் மீது, யூனியன் சர்க்கார் நம்பிக்கை வைப்பதாகக் காணோம்"

"ஏற்படுத்த இருக்கிற தொழிற்சாலை உண்மையிலேயே ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமானால், அதைத் தனி நபர்களிடம் ஒப்படைத்தல் கூடவே கூடாது. பாய்லாயில் (மத்தியப் பிரதேசம்) பிரஸ்தாப தொழிற்சாலையை நிறுவுவதென மத்திய சர்க்கார் முன்னர் செய்த முடிவை மாற்ற, இந்தத் தனி நபர்கள் சதி செய்கிறார்கள் என்றே நான் நம்புகிறேன்."

—தொழில் மந்திரி டி. கே. மேதா.

ஜெர்மனியில் நலை சிறந்த உருக்கு இரும்பு தொழில் திறம் படைத்த குருப் டெமாக் குழுவினர் இந்தியாவுடன் கூட்டாக 1 கோடி ரூபாய் மூலதனத்தில் புதிதாக ஒரு உருக்கு இரும்பு தொழிற்சாலையை நிறுவுவது என ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

புதிய தொழிற்சாலையை மத்தியப் பிரதேசத்தில் உள்ள பாய்லாய் பகுதியில் ஏற்படுத்துவது என முன்னரே மத்திய சர்க்கார் முடிவுக்கு வந்திருக்கிறது.

அங்கு ஏற்படுத்துவதில், மேற்கு வங்கம், பீகார், ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கிடையே, பலத்த போட்டி ஏற்பட்டு இருக்கிறது.

யூனியன் சர்க்காரைக் கண்டித்து மத்திய பிரதேச சட்டசபையில் ஏகமனதான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதுவுமல்லாமல், வேண்டுகோள் ஒன்றையும் மத்திய பிரதேச சர்க்கார், யூனியன் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது. அந்த வேண்டுகோளில், யூனியன் சர்க்காரில் உள்ள சில அதிகாரிகளின் ஓரவஞ்சனையை சுட்டிக் காட்டியும், தவறான புள்ளி விவரங்களைச் சேகரித்துக் கொடுத்து, யூனியன் சர்க்கார் முன்னர் கொண்ட முடிவை மாற்ற முயற்சிக்கும் அதிகாரிகளின் போக்கை விளக்கிக் கூறியும் இருக்கிறது.

இதுபோன்ற ஒரு பெரிய தொழிற்சாலையை இந்தியாவில் நியமிப்பதினால் தங்களுடைய நலம் பாதிக்கப்படும் என்று அஞ்சுகிற சில வெளி நாட்டாரின் சதியும், இதில் மறைமுகமாக வேலை செய்கிறது என்றும் அந்த வேண்டுகோளில் கூறப்பட்டு இருக்கிறது.

பாய்லாய் பகுதியைப் பரிசோதித்து அறிக்கை வெளியிட யூனியன் சர்க்காரால் நியமிக்கப்பட்ட மூவர் நிபுணர் குழுவிடம், தனது நியாயத்தைக் கூற மத்தியப் பிரதேசத்திற்கு நல்ல வாய்ப்புத் தரப்படவில்லை என்றும் குறை கூறப்பட்டுள்ளது.

அந்த மூவரிலும் இருவர் தான் டெல்லியிலிருந்து பாய்லாயிற்கு விமான மூலம் வந்ததாகவும், வழியில் மத்திய பிரதேச சர்க்கார் அதிகாரிகள் தங்களுடைய கட்சியைப் புள்ளி விவரத்தோடு கூறியபொழுது, ஒரு நிபுணர் நன்கு தூங்கிக்கொண்டு கேட்டதாகவும் அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

உற்பத்தி மந்திரி இலாகா உயர்தர அதிகாரி ஒருவரை, மத்தியப் பிரதேச அதிகாரிகள் தங்கள் கட்சியை எடுத்துக் கூற சந்தித்தபோது, 'மத்தியப் பிரதேசத்துக்கு எதிராக யூனியன் சர்க்கார் முடிவிற்கு வந்துவிட்டது' என நிபுணர் குழு தன் அறிக்கையைக் கொடுப்பதற்கு முன்பாகவே குறிப்பிட்டார் என்றும் அந்த வேண்டுகோளில் கூறப்பட்டு இருக்கிறது.

புதிதாகப் புள்ளி விவரங்களைக் கொடுக்க மத்திய பிரதேச சர்க்கார் அதிகாரிகள் முனைந்தபோது, அவர்களுடைய உதவி தேவை இல்லை என்றும், அந்த அதிகாரி கூறிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

உருக்கு இரும்பு தொழிற்சாலையை ஏற்படுத்துவதில் மத்திய பிரதேசத்திற்கு சலுகைக் காட்டுவதாக 1949-ல் கொண்டிருந்த மனதுமுறையை இப்பொழுது மாற்றிக்கொள்ள யூனியன் சர்க்கார் முன்வந்து இருப்பதற்கு உயர் காரணம் என்பது ம. பி. சர்க்காருக்கு விளக்கமாகத் தெரியுமென்று அந்த வேண்டுகோளில் கூறப்பட்டு இருக்கிறது.

கொல்லம் காங்கிரஸ் ஊழியர் கொலை எதிரொலி

கம்யூனிஸ்டுகள் செய்திருக்கலாமென சந்தேகமாம்!

கொல்லம், ஜன. 19—

ஜனவரி 15-ந் தேதி கொலையுண்ட கருணாகரப் பிள்ளை மருதுரன் நாயர் கொலை வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணை செய்துவந்த போலீசார் வேலை மக்கள் கலைக் குழுப்புக்குச் சொந்தமான கார் ஒன்றைக் கைப்பற்றினர். இது கம்யூனிஸ்டு கட்சி பிரசாரத்திற்காக நடத்தப்பட்டு வந்த ஒரு நாடகக் குழுப்புக்குச் சொந்தமானது.

இரத்தம் தோய்ந்த சட்டை ஒன்றும் காரில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புலன் விசாரணையிலிருந்து மருதுரன் நாயர் காங்கிரஸ் பஞ்சாயத்து மெம்பர் என்றும், காங்கிரஸ் ஊழியர் என்றும், ஜன. 15ந் தேதி மாலை 6 மணிக்கு காங்கிரஸ் தொண்டர்களுக்கு காங்கிக் குல்லாய் தைக்கக் கொடுத்து விட்டு வீடு திரும்புகையில், வழியில் ஆயுதம் தாங்கிய கூட்டத்தாரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாரென்றும், சம்பவ இடத்துக்கருகில் வாசுப் பிள்ளையின் வீட்டில் வெட்டுக் கத்தி ஒன்று இரத்தக் கறையுடன் போலீசாரால் எடுக்கப்பட்டதென்றும் பல விஷ தகவல்கள் கூறுகின்றன.

வாசு பிள்ளை கம்யூனிஸ்டு பிரசார நாடகக் குழுப்பின் ஸ்டேஜ் மானேஜர். அவரும், மற்றும் அறுவரும் தலை மறைவாகச் சென்றுள்ளனர். போலீசார் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றதில் கொல்லம் ஓட்டல் ஒன்றில் அவர்கள் கருணாகரப் பிள்ளையிலிருந்து வந்த காரைக் கைப்பற்றினர்; ஆனால், சந்தேகப்படும் நபர்கள் தப்பித்துக்கொண்டனர்.

கைப்பற்றப்பட்ட சட்டை வாசுப் பிள்ளையினுடையது என போலீசார் கூறுகின்றனர்.

கொலை செய்யப்பட்டவரின் பிரேதம் வீதியில் எறியப்பட்டு, கழுத்தில் ஆழமான காயங்களுடன் இருந்தது. பிரேத பரிசோதனைக்குப் பிறகு பிரேதம் உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

—"தினமணி"

காங்கிரஸ் கொடியை அகற்ற கமிஷனர் கட்டளை

கமிஷனர் மீது காங். உறுப்பினர்களின் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

இராசபாளையம், ஜன. 11—

இராசபாளையம் நகர சபை கமிஷனர் கே. சுப்பிரமணியம், இந்தோசிய வடக்கே குஞ்சுமார்க்கெட் பக்கமிருக்கும் ஐந்து விளக்கு வருகிலுள்ள தேசியக் கொடியை, மாவட்ட முனிசிபல் சட்டம் 186-வது விதியின்படி 3 தினங்களுக்குள் அப்புறப்படுத்துமாறு கேட்டு இந்நகர் காங்கிரஸ் கமிட்டிக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

★

இராசபாளையம், ஜன. 19—

இராசபாளையம் முனிசிபல் கமிஷனர் சுப்பிரமணியம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நகர சபைத் தலைவர் எம். ராமசாமி தலைமையில் நடைபெற்ற நகரசபை விசேடக் கூட்டத்தில் நிறைவேறியது.

கே. என். லட்சுமண பெருமாள் இத்தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

பொதுவுடைமைத் தோழர் சங்கிலி தீர்மானத்தை எதிர்த்தார். மற்றவர்கள் ஆதரித்தனர்.

இச்செய்தி மேலதிகாரிகளுக்குத் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை-இந்தியா நல்லுறவு

கொத்தலவாலாவின் நம்பிக்கை வளருகிறது

புதுடெல்லி, ஜன. 19—

இலங்கை-இந்தியர் பிரச்னை முடிவாகத் தீருவதில் பிரதம மந்திரிகளின் உடன்பாடு ஒரு முதல்படி என்பதாக இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலவாலா கூறினார்.

"பத்து ஆண்டுகள் இது அமுலிலிருக்கும். அதன் பின்னர், இலங்கை பிரஜையாகவோ, அல்லது இந்திய பிரஜையாகவோ தானிருப்பார்கள். வேறு இனம் பாக்கி இருப்பதற்கில்லை எனக்குத் திருப்தி ஏற்பட்டிராவிடில் நான் கையொப்பமிட்டிருக்கமாட்டேன். இலங்கை இந்தியரைப் பொறுத்த மட்டில் அவர்கள் இலங்கையராகப் பிரியப்படுவார்களானால் அவர்களும், அதில் திருப்தியடைவார்கள்," என்றார் இலங்கைப் பிரதமர்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இந்த ஒப்பந்தத்தின் பயனாக இரு தேசங்களிடையேயும் பிரயாண வசதி பெருகக் கூடுமென நம்புகிறேன். இந்தியப் பிரஜைகள் சரியான ரிகார்டுகள் வைத்திருக்க வேண்டும். இலங்கைப் பிரஜைகள் தேசத்தின் சட்டதிட்டப்படி நடந்து கொள்வார்கள். மற்றவர்கள் நிரந்தர வாச பெர்மிட்டுகள் பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். இந்த நிரந்தர கால பர்மிட் பெற்றவர்கள் பிரிவு வரையில் மறைந்துவிடுமெனக் கருதுகிறேன். நாட்டோடிகளுக்கு நாம் தனி உலகை உருவாக்க இயலாது."

"இலங்கைப் பிரஜைகளாகாதவர்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள இலங்கை சர்க்கார் அனுமதிக்கும். நாங்கள் பென்ஷன் தருகிறோம்; குடும்பத்துடன், இந்தியா செல்ல பிரயாண வசதி அளிக்கிறோமென்றால், அது அன்போடாகும்", என்றார்.

வாழ்த்தும் — நன்றியும்

தமிழகத்திலிருந்தும், பர்மா, மலேயா, சிலோன் ஆகிய இடங்களிலிருந்தும், திராவிடர் திருநாளன்று 'புத்தாண்டு வாழ்த்து' அனுப்பிய தோழர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தும்—நன்றியும்!

எம். ஜி. ராமச்சந்திரன்.
சென்னை, 19—1—54

நம் நாடு

திமுகழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—1—1954 புதன்

குட்டு வெளிப்பட்டது!

கனம் ஆச்சாரியார் சர்க்கார், அவசர அவசரமாக விவசாயக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை, ஏற்கனவே சென்னை சட்டசபையில் சட்டமாக்கி இருக்கிறது. அதனால் ஏழை விவசாயிகள், ஓராண்டு வரையிலாவது கடன்காரர் தொல்லைகளிலிருந்து விலகி, நிம்மதியாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி, நமது கருத்தை ஏற்கனவே திட்டவட்டமாக நாம் கூறி இருக்கிறோம். புதிய கல்வித் திட்டத்தை எதேச்சாதிகாரமாகப் புகுத்தியதால் ஏற்பட்டுள்ள சொந்த செல்வாக்குச் சீரழிவை சமன் செய்து கொள்வதற்காகவே இந்தக் கண்துடைப்பு வேலையைச் செய்ய, ஆச்சாரியார் முன்வந்திருக்கிறார் என்று அதில் விளக்கிக் கூறி இருந்தோம்.

விவசாயக் கடன் ஒத்திவைப்பு மசோதா சட்டசபையில் விவாதத்தில் இருக்கும்போது, அதில், பல திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று உறுப்பினர்கள் சிலர், திருத்தங்கள் கொண்டுவந்தனர். அவ்வாறு கொண்டுவரப்பட்ட பெரும்பாலான திருத்தங்களை, ஆச்சாரியார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அவைகளில் ஒன்றுன, வருமான வரி கட்டுகிறவர்களுக்கு, கடன் ஒத்திவைப்புச் சட்டப் பாதுகாப்பிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்ற, ஒரு திருத்தத்தை மட்டும் அவர் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப சட்டத்தைத் திருத்தியுள்ளார்.

குறிப்பிட்ட சட்டத்திலுல வருமான வரி செலுத்துகிறவர்களுக்குச் சலுகை இருக்கக்கூடாது என்பது போலவே நூற்றுக்கணக்கில் நில வரி செலுத்துகிற பெரும் நிலக்கிழார்களுக்கும் கடன் ஒத்திவைப்பு சலுகை இருக்கக்கூடாது என்ற ஒரு திருத்தமும் கொண்டுவரப்பட்டது. வருமான வரி செலுத்துகிறவர்களுக்குச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு இருக்கக்கூடாது என்று கூறுவதில் எந்தவித நியாயமிருக்கிறதோ, அதே அளவு நியாய பலம்தான், பெருநிலக்கிழாருக்கு சட்டப் பாதுகாப்புக் கூடாது என்ற கூற்றிலும் இருக்கிறது. இந்த இரண்டிலுமுள்ள ஒரேவகை நியாயத்தை ஒருவராலும் மறுக்க முடியாது. அமைச்சர் ஆச்சாரியாராலும் இதிலுள்ள உண்மையை மறைக்கவோ, மறுக்கவோ முடியவில்லை. நியாயத்தை ஒப்புக்கொண்டுள்ளார் அவரும். ஆனல, நேராக அல்ல; மறைமுகமாக!

வருமான வரி செலுத்துகிறவர்களை சட்டப் பாதுகாப்பிலிருந்து விலக்க வேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக்கொண்டதற்கும், பெரு நிலக்கிழார்களையும் விலக்கவேண்டும் எனக் கொணர்ந்த திருத்தத்தை ஏற்க மறுத்ததற்கும் ஆச்சாரியார் அருமையான விளக்கம் ஒன்று கொடுத்திருக்கிறார். அதாவது, நில வரியை அடிப்படையாகக் கொண்டு விலக்கு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனல் அது அவசியமில்லை. பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கெல்லாம், வேறு வியாபாரங்களில் ஈடுபாடு இருக்குமாதலால் வருமான வரி செலுத்துபவர்களாக இருப்பார். ஆகவே அவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள்' என்று ஆச்சாரியார் அறிவித்திருக்கிறார்.

நில வரியை அடிப்படையாகக் கொண்டு கடன் ஒத்திவைப்பு சட்டத்தைக் கொண்டு வராததற்கு, அமைச்சர் ஆச்சாரியார் கூறும் காரணம் பொருந்துமாறு இல்லை. பெரிய நிலக்கிழார்கள் அனைவரும் வருமான வரி செலுத்தக்கூடிய, வேறு வியாபாரத் துறையில் ஈடுபடுகிறவர்களாகக் கட்டாயம் இருக்கிறார்கள் என்று ஆச்சாரியார் நம்புவதாக இருந்தால், தனது கடன் ஒத்திவைப்புச் சட்டத்திற்கு நில வரியையே ஒரு அளவுகோலாகக் கொள்ள ஆச்சாரியார் தயங்கவேண்டிய அவசியமே இல்லை. அவர் எப்பொழுது வருமான வரியை மட்டுமே ஏற்றுக்கொண்டு, நிலவரியை ஒதுக்கித் தள்ளிவிட்டாரோ, அதிலிருந்தே, பெரிய நிலக்கிழார்களில் பலர் வருமான வரி செலுத்துபவர்களாக இல்லவே இல்லை என்ற உண்மையை, ஆச்சாரியார் உணர்ந்தே இருக்கிறார் என்பது விளக்கமாகத் தெரிகிறது. கடன் செலுத்துவதில் பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கு சட்டத்தின்படி, எந்தவிதச் சலுகையும் தரக்கூடாது, என்பதில், அவருக்கு உண்மையிலேயே ஆசை இருக்குமானுல், நிலவரியை அடிப்படையாகக் கொண்டே கடன் ஒத்திவைப்பு சட்டத்தை உருவாக்க, ஆச்சாரியார் முன்வந்து இருக்க வேண்டும். ஆனல், ஆச்சாரியார் அப்படிச் செய்ய முன்வரவில்லை.

பெரிய நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் வருமான வரி செலுத்துபவர்களாக இருப்பார்கள்; வருமான வரி செலுத்துகிறவர்களுக்கு சட்டப்படி கடன் தவணை கிடையாது என்று சட்டத்தில் திட்டம் செய்துவிட்டாலே போதும்—இந்தச் சட்டத்தின் மூலம் பயனடைவதிலிருந்து பெரிய நிலச் சொந்தக்காரர்களைத் தடுத்து விடலாம்—என்று ஆச்சாரியார் சமாதானம் கூறி இருக்கிறார். பெரும் நிலக்கிழார்களில் வருமான வரி செலுத்துகிற அளவிற்கு வியாபாரம் செய்கிறவர்களும் உண்டு—வியாபாரத்திலேயே ஈடுபடாது ஏழை உழவர்களின் உழைப்பை உறிஞ்சி, உல்லாசமாக வாழ்பவர்களும் உண்டு—இந்த நில நடைமுறையில் இருந்து வருவது ஆச்சாரியாருக்கும் தெரியும்.

கடன் ஒத்திவைப்புச் சட்டத்தின்கீழ் பெரும் நிலக்கிழார்கள் ஒருவித சலுகையும் அறவே பெறக்கூடாது என்ற எண்ணம் உறுதியாக ஆச்சாரியாருக்கு இருந்திருக்குமானுல், கடன் தவணை சட்டத்திற்கு நிலவரியையே அடிப்படையாகக் கொள்ள வேண்டியதுதான் நியாயத்திலும் நியாயமாகும்.

குறிப்பிட்ட சட்டத்திற்கு நில வரியை அடிப்படையாகக் கொள்வதினுல், பெரும் நிலக் கிழார்களில் வருமான வரி செலுத்துபவர்களும், அந்த வரி செலுத்தாதவர்களும் சட்டத்தின்கீழ் சலுகை பெறுவது அறவே முடியாது போய்விடும்.

நில வரியை ஏற்க மறுத்துவிட்டு, வருமான வரியை மட்டும் பொருட்படுத்தி ஏற்றுக்கொண்டதினுல், வருமான வரி கட்டாத பெரும் நிலச்சுவான்தார்களும் கடன் தவணை சட்டத்தினுல் பயன் பெற இடம் ஏற்படுகிறது.

கடன் தவணைச் சட்டம், சாதாரண ஏழை விவசாயிகளுக்கு மட்டுந்தான் பயனளிக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை ஆச்சாரியாருக்கு இருந்திருக்குமானுல், சட்டத்தினுல் பெரிய நிலச்சுவான்கள் பயன்பெறுவதைத் தடுக்க ஆச்சாரியார் முன்வந்திருக்க வேண்டும். எப்பொழுது ஆச்சாரியார் இதைச் செய்ய முன்வரவில்லையோ, அந்த ஒன்றிலிருந்தே, கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை அவர் கொண்டுவந்ததற்கு, அந்தரங்கத்தில் அவருக்கு வேறு நினைப்பிருக்கிறது என்பது வெளியாகிறது!

நமது கிராமங்களின் சமுதாய அமைப்பை ஆச்சாரியார் நன்கு அறிவார். ஒரு கிராமத்தில் உள்ள மணியக்காரருக்கும், உயர் ஜாதிக்காரருக்கும், சாதாரண ஏழை மக்களுக்கும் உள்ள உறவு முறை எத்தகையது என்பதை, அவர் அறிந்தே இருக்கிறார். கிராமங்களில் குறைந்த நிலம் படைத்தவர்கள், எவரிடம் கடன் பெறுகிறார்கள் என்பதும், அந்தக் கடன் எப்படி வசூலிக்கப்படுகிறது என்பதும் ஆச்சாரியார் அறியாததல்ல.

கிராமங்களில், நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது கடன் விவகாரங்கள் நீதிமன்றத்தைக் காணுமலே அச்சுறுத்தி வசூலிக்கப்படுகிறது என்ற உண்மையும், அவருக்குத் தெரியாததல்ல. ஏதோ ஒன்றிரண்டு அடங்காப் பிடாரிகள் விஷயத்தில்தான் பட்டா மணியக்காரர் அதிகாரமும், உயர் ஜாதிக்காரரின் அச்சுறுத்தலும் செல்லுபடியாகாமல், நீதிமன்றம் வரைக்கும் வருகிறது என்ற உண்மை மற்றவர்கள் அறிந்திருப்பதுபோல் அவரும் அறிந்திருக்கிறார்.

இத்தகையக் கொடுமையான சிலந்திக் கூட்டில் சிக்கியுள்ள நமது சாதாரண கிராம விவசாயிகளுக்கு, கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைக் காட்டிலும் கடுமையான விதிகள் கொண்ட சட்டத்தினுலும் காதொடிந்த ஊசியளவும் பயன் ஏற்படப்போவதில்லை என்பது முக்காலும் உண்மையாகும் அவர்களுக்கு நன்மை பயக்கும் காரியமே வேறு. அதை அமைச்சர் ஆச்சாரியார் ஒருக்காலும் செய்ய முன்வரப்போவதில்லை. மற்ற,

கடன் ஒத்திவைப்புச் சட்டத்தின்மூலம் தற்காலிக நன்மை பெற இருப்பவர்கள் நூற்றுக்கணக்கில் நில வரி செலுத்துபவர்களேயாவார்கள் இந்த ஒன்றை மட்டுமே மனதில் கொண்டுதான் கடன் தவணை சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து இருக்கிறார் அவர்.

கிராமப்புறங்களில் உள்ள பெரும் நிலப் பிரபுக்களில் பலர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்துள்ளவர் என்பது வெளிப்படை. அவர்களில் பலர், சென்ற தேர்தலில் கலந்து கொண்டு, கடன்காரர்களாகி இருக்கிறார்கள் என்பதும் உண்மையாகும். அவர்களில் பலர் ஆச்சாரியாரைத் தனித்த முறையில் ஆதரித்துக் கிடப்பவர்கள் என்பதும், பகிரங்க இரகசியம் காங்கிரசுக்குள்ளாக உள்ள கோஷ்டிச் சண்டையில், கடன் கொடுத்தவர்களைத் தூண்டிவிடுவதும், கடன் பட்டவரை நெருக்குவதும் நமது நாட்டில் சர்வ சாதாரணமாக நிகழக்கூடிய அரசியல் திருவிளையாடலாகும். இப்படி சங்கடத்தில் மாட்டிக் கொண்டு ஏதாவது உதவி கிடைக்காதா என்று ஏங்கிக் கிடந்த, ஆச்சாரியார் முகாமில் உள்ள சில பல மிட்டாமிராசுகளைக், கடன் தொல்லையில் இருந்து காப்பாற்றத்தான், இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதாவை அமைச்சர் ஆச்சாரியார், அவசர அவசரமாக சட்டமாக்கினார் என்று நாம் ஆச்சாரியார் மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறோம். ஆச்சாரியாரின் செயல் அனைத்தையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கே இந்த உண்மை புலனுகும் என்பதை நாம் மறக்கவில்லை.

நாம் சுட்டிக்காட்டும் இந்தக் குற்றச்சாட்டு வெறும் அபாண்டம் என்று, எவராவது கூறுவதாக இருந்தால், கடன் ஒத்திவைப்பு சட்டத்திற்கு நிலவரியை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட திருத்தத்தை வேண்டுமென்றே ஆச்சாரியார் ஏற்றுக்கொள்ள மறுத்ததற்கும், சிலரே செலுத்தும் வருமான வரி விலக்கு திருத்தத்தை மட்டும் ஏற்றுக்கொண்டதற்கும், அதற்கு அவர் கூறிய சமாதானத்திற்கும் சரியான விளக்கம் தர முன்வர வேண்டும். விளக்கம் கிடைக்கவில்லையானுல், ஆச்சாரியார் குட்டு வெளிப்பட்டுவிட்டது என்றக் கசப்பான உண்மையை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

தமிழிலுள்ள சமூக நூல்கள் — இந்தியில் மொழி பெயர்க்கப்படும்

சென்னை, ஜன. 19—

தமிழிலும், இதர பிராந்திய மொழிகளிலுமுள்ள சமூக நூல்களை, இந்திய மொழி பெயர்க்கவும், அவைகளைக்கொண்டு சமூகக் கல்வி நூல் நிலையமொன்றை புதுடில்லியில் நிறுவுவதற்கும் முனையுமாக சர்க்கார் திட்டமிட்டுள்ளனர்.

விமானியில்லா விமானங்கள்!

நியூயார்க், ஜன. 20—

விமானியில்லா விமானங்களை அமெரிக்கா தயாரித்து வருகிறது. இவை, அணுக்குண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடியன. தரையிலிருந்தே இவைகளை இயக்கச் செய்யலாம். அடுத்த யுத்தம் ஏற்பட்டால் இந்த விமானங்கள் மிகவும் முக்கியத்துவம் அடையும்.

தூத்துக்குடி சதி வழக்கு

ஜாமீன் மனு மறுப்பு

திருநெல்வேலி, ஜன. 18-

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்ட தோழர் பிச்சுமணி முதலிய 26 எதிரிகள் சார்பில் அவர்களை ஜாமீனில் விடும்படி கோரி அட்வகேட் வி.என்.கந்தையா சமர்ப்பித்த மனுவை செஷன் ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் எஸ். அரிகர அய்யர் நிராகரித்தார். இம்மனுவை ஏற்றுக்கொள்ளப் போதிய ஆதாரமில்லையென அவர் சொன்னர். இம்மனுவை அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர் டி. திண்ணுயிரம் பிள்ளை எதிர்த்தார்.

விற்பனை வரி

கோடுமையைக் குறைக்க ஆச்சாரியார் மறுப்பு

சென்னை, ஜன. 18—

விற்பனை வரியை ஒரே கட்டத்தில் வசூலிப்பதால், வரி ஏமாற்றம் அதிகரித்துவிடுமென இன்று சட்ட சபையில் ஆச்சாரியார் கூறினர்.

விற்பனை வரியை ஒரே கட்டத்தில் வசூலிக்க உத்தேசமெதுவும் இல்லையென மாணிக்கவேலர் சொன்னர்.

“விற்பனை வரி வசூலிக்கும் முறை கொடுமையாக இருக்கிறதே” என்று கேட்டதற்கு “வரியே கொடுமையாகத்தான் இருக்கும். அதனுல் வசூலிக்கும் முறையும் கொடுமையாகத்தானே இருக்கும். அதை எப்படி ஒழிக்க முடியும்” என்று முதலமைச்சர் ஆச்சாரியார் பதில் சொன்னர்.

ஆந்திர சர்க்கார் பேரம் பேசுகிறது

ரூ.50 லட்சம் லாபத்திற்கு ‘அடிகோலுகிறது!’

சென்னை, ஜன. 20—

சென்னை சர்க்காருக்கும், வியாபாரிகளுக்கும், திருவாங்கூர்—கொச்சி சர்க்காருக்கும் அரிசி சப்ளை செய்வது விஷயமாக ஆந்திர சர்க்கார் இன்னும் ‘பேரம்’ பேசிவருகிறது இப்போதுள்ள நிலைமையில், திட்டமாக எதுவும் கூறமுடியாமல் இருக்கிறதென்றும், இன்னும் சில தினங்களில் அறிவிப்பு வெளியாகலாம் என்றும் கூறப்படுகிறது.

இம்மூன்று தரப்பினருக்கும், மூன்றுவிதமான விலையை ஆந்திரர் கூறுவதாகத் தெரிகிறது.

இந்தப் பேரத்தின் காரணமாக ரூ 50 லட்சம் நிகர லாபமாக ஆந்திர சர்க்காருக்குக் கிடைக்குமாம்!

பாகிஸ்தானில் பார்வை இழந்தோர் எண்ணிக்கை

கராச்சி, ஜன. 20—

பாகிஸ்தானில் 3,90,000 பேர்கள் பார்வை இழந்தவர்கள் என்றும், லட்சம் பேர்களில் 500 பேர் பார்வை இழந்தவர்கள் என்றும் தெரிகிறது.

குறைன தோஷணம், போதிய சத்து இல்லாத உணவு, தூசி, புகை இவைகளே அநேகம் பேர் பார்வை இழப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

8 லட்சம் ரூபாய் செலவில் லட்ச தீபம்!

திருவனந்தபுரம், ஜன. 20-

திருவனந்தபுரத்தில் லட்ச தீப மஹோத்சவமும், முறை ஜபமும், 56 நாட்கள் விடாமல் வேத பாராயணமும், பத்மநாப சுவாமி ஆலயத்தில் நடைபெற்றுள்ளது.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 20—

தூத்துக்குடி கலவர வழக்கு மீண்டும், 13—1—54-ல், விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. அரிகர அய்யர் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

96-வது சாட்சி

சம்பவம் நடந்த தினத்தில், மேலூர் ஸ்டேஷனில் டியூட்டியில் இருந்த உதவி போலீஸ் சூப்பரிண்டெண்ட் என். குழந்தை 96-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"ரயிலை நிறுத்தப் போகும் விஷயம் எனக்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பே சொந்த முறையில் தெரியும்; மேலும், சம்பவம் நடந்த தினத்திற்கு முன் தினம், தூத்துக்குடியில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்திலும் இது வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து, சுவர்களிலெல்லாம் எழுதப்பட்டது; முதல் ஐந்து எதிரிகள், நகர தி. மு. கழகத்தில் பிரதான பாகம் வகிப்பவர்கள் என்பது எனக்குத் தெரியும்; ஜூலை 14-ந் தேதி இரவு எட்டு மணிக்கு ராசுவிடம், மேற்படி எதிரிகளைக் கைது செய்யும்படி உத்திரவு கொடுத்தேன்; மேற்படி எதிரிகளை இதற்கு முன்னரே கைது செய்வது உசிதமில்லையென எனக்குப்பட்டது; மேலூர் ஸ்டேஷனில் தடியடிப் பிரயோகத்திற்கு உத்தரவு அளிக்கப்பட்டதுமே கல்வீச்சு ஆரம்பமாயிற்று; தடியடிப் பிரயோகம் நின்ற பின்னும் ஒரு சில கற்கள் வந்து வீழ்ந்தன; இரண்டாவது, முறை தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டதில் கல்வீச்சு அதிகமாயிற்று"

திரு. எஸ். சுப்ரமணிய பிள்ளையால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், சாட்சி தெரிவித்ததாவது:—

"3, 4, எதிரிகளை கிருஷ்ணவிலாஸ் முன்பு சப்-இன்ஸ்பெக்டர் மாமன்னன் கைது செய்ததாகக் கூறுவது தவறு; தி மு கழகத் தலைவர்களைக் கைது செய்யுமாறு ராசுவுக்கு நான் வாய்மூலமாகவே உத்தரவிட்டேன். புதுக்கிராமத்தை நான் லாரி மூலம் பார்வையிட்டபோது, என்னுடன்கூட ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் வரவில்லை; லாரியில் நானும், உதவி கலெக்டரும், மற்றும் 10 போலீஸ்காரர்களும் இருந்தோம்; கிராமத்தைச் சுற்றிப்பார்க்கும்போது யாரும் என்னிடத்தில் வந்து புகார் செய்யவில்லை."

97-வது சாட்சி

போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆர். ராமகிருஷ்ண ராஜா பிறகு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"நகர தி. மு. கழகத்தில் எதிரிகள் 1 முதல் 5 வரை பிரதான பாகம் வகித்து வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும் (பின்னர் சாட்சி எதிரிகள் கைது செய்யப்பட்ட விதத்தை எடுத்துக் கூறினார்) சம்பவம் நடந்த தினம் காலை நான் ஒரு வழக்கு விஷயமாக நெல்லை சென்றேன். மாலையில்தான் திரும்பிவந்தேன்; அதுவரை கிருஷ்ண அய்யர் பொறுப்பு ஏற்று இருந்தார்; ஜூலை 17-ம் தேதி சில நபர்களைக் கைது செய்வதற்கு நான் கிருஷ்ண அய்யருக்கு உதவி புரிந்தேன்; மறுநாள் நானும், சப்-இன்ஸ்பெக்டர் மாமன்னனும் ஹார்வி மில்லுக்குச் சென்றோம்; சம்பவம் நடந்த அன்று மில்லுக்கு வராதிருந்த 100 பேர்களைக் கைது செய்தோம்; இதில் 27 நபர்கள் மேலூர் ரயில் நிறுத்தத்தில் கலந்து கொண்டவர்களாவர். எதிரிகள் 43 முதல் 55 வரை 57, 62, 67, 71, 60, 65, 56, 58, 68, 59, 66, 61, 64, 63 ஆகியோர் அன்று கைது செய்யப்பட்டவர்களாவர். எதிரிகள் 69, 72, 77, ஆகியோர் மில் வாசலில் கைது செய்யப்பட்டனர்; ஜூலை 20-ந் தேதி, 5வது எதிரியின் வீட்டை நான் சோதனை போட்டு சில முக்கியமான தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றி கோர்ட்டார் வசம் ஒப்படைத்தேன்."

திரு எஸ். சுப்ரமணிய பிள்ளையால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் தெரிவித்ததாவது:

"69, 70-வது எதிரிகள், முதல் எதிரியைப் போலீஸ் ஸ்டேஷனில் வந்து பார்த்தபோது அவர்களைப் போலீசார் கைது செய்ததாகக் கூறுவது தவறு; சம்பவம் நடந்த தினம், மில்லுக்கு வராத நபர்களின் பெயர் கொண்ட பட்டியலை நாங்கள் கேட்கவில்லை."

98-வது சாட்சி

98-வது சாட்சியாக ரயில்வே போலீஸ் கான்ஸ்டேபிள் ஆர். ராமசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவம் நடந்த தினத்தன்று பந்தோபஸ்து வேலைக்காக நான் தூத்துக்குடிக்கு வந்தேன்; (சாட்சி பின்னர் நடந்த கலவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்) கலவரத்தின்போது ஏற்பட்ட கல்வீச்சினால், என் இடது மணிக்கட்டில் காயம் ஏற்பட்டன"

நெடுஞ்செழியன் சுற்றுப் பிரயாணம்

★

ஜன 21 ஒண்டிப்புதூர்
,, 22 வெள்ளைக்கோயில்
,, 23 பாப்பநாய்க்கன் பாளையம்
,, 24 குன்னூர்
,, 25 சேவூர், திருப்பூர்
,, 26 கோவை
,, 27 கணியூர்
,, 28 உடுமலைப் பேட்டை
,, 29 கோவைக் கல்லூரி
,, 30 குடந்தை

கிரிமினல் சட்டத் திருத்தம்

பத்திரிகைசுதந்திரத்தைப் பாதிக்கும்

பி. சோ. கட்சி தீர்மானம்

பாட்னா, ஜன. 18—

சர்க்கார் ஊழியர்கள், மந்திரிகள் பற்றி அவதூறுகப் பேசுவதை போலீசாரே நடவடிக்கை எடுக்கும் குற்றமாக்க கிரிமினல் சட்டத் திருத்த மசோதாவில் விதிகள் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டித்து, பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாகக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அது சம்பந்தமாக முந்திய கருத்தை மாற்றிக் கொள்வதாகவும், இந்த விதி கருத்து சுதந்திரத்தையும் பாதிக்குமென்றும், கட்சி உறுப்பினர்களும், பொது மக்களும் அதை எதிர்க்க வேண்டுமென்றும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'கடன் பெற ஏற்பாடில்லாமல், கடன் ஒத்திவைப்பால் பயனில்லை'

—(:)—

கூட்டுறவு கடன் உதவியைப் பெருக்க ஆந்திர சர்க்கார் முயற்சி

கர்நூல், ஜன. 17—

கிராம விவசாய மக்களுக்குக் கடன் கொடுத்து உதவக் கூட்டுறவு கடன் தரும் வசதிகளை மேலும் பெருக்குவதற்கு ஆந்திர சர்க்கார் முயற்சிப்பதாகத் தெரிய வருகிறது

கிராம மக்களின் கடன் தொல்லையை, கடன் ஒத்திவைப்பு சட்டத்தின் மூலம் பரிகரித்துவிட முடியாது என்றும், கடன் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் கடனை ஒத்திவைப்பது விவசாயிகளுக்கு கேடு பயக்கக் கூடியதாகும் என்றும் ஆந்திர சர்க்கார் கருதுவதாகவும் தெரியவருகிறது.

மன்னார்குடியில் கருணாநிதி

மன்னார்குடி ஜன. 19—

"நாம் விழாக் கொண்டாடி மகிழும் இந்நேரத்தில். தூத்துக்குடியில் 100 குடும்பங்கட்கு மேலும், நடராசன் முதலிய உயிர் நீத்த அறுவர் வீட்டிலும், குமுறலும்-அழுகையும் நிறைந்திருக்கும். வரும் ஆண்டுகளில், நாம் கொண்டாடும் பொங்கல்களாவது திராவிடரின் விடுதலைப் பொங்கலாக— உண்மையான மகிழ்ச்சிப் பொங்கலாக விளங்க, இன்று விழாக் கொண்டாடு திருமூலம் உறுதி கொள்வோம்,"

—என்று, 14—1—54-ல், இங்கு நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில் பேசுகையில், தோழர் கருணாநிதி கூறினார்.

தி மு. கழகச் சார்பில், தேரடியில, மாலை 6 மணிக்கு வரவேற்பு விழா, பரிசளிப்பு விழா, பொங்கல் விழா ஆகிய முப்பெரு விழாப் பொதுக்கூட்டம் தோழர் ப. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது முதலில் தோழர் கருணாநிதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. மன்னார்குடி, அரித்திராநதி, கூப்பாச்சிக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மகாதேவபட்டணம், திருமக்கோட்டை, வடுவூர், திருப்பாலக்குடி, சேரன்குளம், இராதாநரசிம்மபுரம், நீடாமங்கலம், எடமேலையூர் மற்றும் பல ஊர்களிலிருந்தும் வரவேற்பிதழ்களும், மலர்மாலைகளும் அளிக்கப்பட்டன. மாணவர் கழகங்களாலும், தோழர் ப ஞானசுந்தரம் அவர்களாலும் வரவேற்பிதழ்கள் அளிக்கப்பட்டன, பொதுமக்கள் பலரும் மலர்மாலைகள் அணிவித்தனர்.

அடுத்தபடியாக திருச்சி மத்திய சிறையில் நடந்த இசைப் போட்டியில் வெற்றிபெற்ற தோழர்கள் நடராசன், கருணா, அப்பாசாமி ஆகியோருக்கு தோழர் கருணாநிதியால் பரிசு வழங்கப்பட்டது முதற்பரிசு பெற்ற மாயவரம் செபாஸ்டின் வரதால் பரிசைக் கழகத்தில் சேர்க்கப்பட்டது.

அடுத்து, பொங்கல் விழா நடைபெற்றது தோழர் அடைக்கலம் அவர்கள் பேசியபின், தோழர் கருணாநிதி அவர்கள் பேசுகையில், முப்பெரு மன்னர்கள் காலத்திலிருந்து இந்நாள் வரை நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், முத்தமிழ் வளர்த்த மன்னர்கால தமிழ் நாடும் இக்காலத்தமிழ்நாடும்' என்பதுபற்றியும், பொங்கல் — தூத்துக்குடி சதி வழக்கு-கல்லக்குடிபோராட்டம் — திராவிட முன்னேற்றக் கழக மும்முனைப் போராட்டத்தில் வெற்றி கிட்டிய விதம்— ஆக்க வேலைகள் முதலியன பற்றியும் விரிவுரையாற்றினார்.

தமிழகமெங்கணும் — திராவிடர் திருநாள்

★

சென்னை 37-வது வட்டம்

சென்னை இராயப்பேட்டை தி. மு. கழக சார்பில், 17-1-54 காலை 10 மணிக்கு, கழகக் கட்டடத்தில், தோழர் மு அரங்கநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள்: டி. ஞானசேகரன், எம். ஜி இராதா, என். சுந்தரம், இரா லிங்கராசன், பொ. நா. சண்முகம், வெ. கி. பார்த்தசாரதி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சிறுவர், சிறுமிகளின் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு, அனைவருக்கும் இனிப்பு பண்டங்கள் வழங்கப்பட்டன.

சௌந்திரபாண்டியன் படிப்பகம்

சென்னை, ஏழுகிணறு சௌந்திரபாண்டியன் படிப்பகத்தின் சார்பில், காலை 10 மணிக்கு படிப்பகத்தில், தோழியர் சத்தியவாணி அம்மையார் தலைமையின் கீழ் விழா நடைபெற்றது. அவ்வமயம், படிப்பகத்தில் அண்ணாவின் படத்தைத் தோழர் ஏ. ஜெ. ராமன் திறந்து வைத்தார் தோழர்கள். சி என். கந்தசாமி, கரிகாலன் ஆகியோர் பேசினர். இறுதியில் தோழர் வி முனுசாமி (முன்னாள் நகரசபை உறுப்பினர்) நீண்டதோர் சொற்பொழிவாற்றினார் கூட்டம் முடிவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது என்று பொறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிவகாசி

இவ்வூர் தி மு க கிளைக் கழகத்தின் சார்பில், காலை 5—30 மணிக்கு பொங்கல் வைக்கப்பட்டது. 6-30 மணிக்கு, தோழர் கணேசன் கழகக் கொடியை ஏற்றினார். கழகத் தோழர்கள் இயக்கப் பாடல்கள் பாடினர். தோழர்கள் பெ மா. பெரியசாமி ச. அ. நடேசன் ஆகியோர் பேசினர் பின்னர், சிறுவர்களுக்கும், வயோதிகர்களுக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை

இவ்வூர் தி. மா. மு. கழகச் சார்பில், தி. மு. கழகக் கொடியை ஏற்றி, சிறுவர் சிறுமிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டன.

தொட்டியம்

தி. மு க கிளைக் கழகச் சார்பில், காலை 9 மணிக்கு, தோழர் டி வி என். ராஜன் தலைமையில் விழா நடைபெற்றது. கழகத் தோழர்கள் குழுமியிருந்தனர் தலைவர் உரைக்குப் பின், புதுப்பாளையம் தோழர் லோகநாதன் பொங்கல் விழா பற்றி விரிவுரையாற்றினார். 4 மணிக்கு யாவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

டி. சுப்புலாபுரம்

இவ்வூர் வள்ளுவர் படிப்பகத்தாரால், 15—1—54ல், வள்ளுவர் பிறந்த தின விழாவும், தைப் பொங்கல் திருநாளும் தோழர் படிக்காசு தலைமையில் கொண்டாடப்பட்டது. படிப்பகத்திலிருந்து நாறு ஜோடி மாடுகளுடனும், தி. மு கழகக் கொடிகளுடனும், ஏராளமான தோழர்கள் உடன்வர, முக்கிய தெருக்களின் வழியாக வந்து, தெற்குத் தெருவிலுள்ள பொதுச் சாவடியின் முன்பாக தோழர் ச. படிக்காசு அவர்களால் கொடியேற்றப்பட்டது. அதுசமயம், வள்ளுவர் பிறந்த தினத்தைப் பற்றியும், பொங்கல் திருநாளைப் பற்றியும் தோழர்கள் கு. ராமையாவும், கோதண்டமும் பேசினர்.

கட்டிமேடு (தஞ்சை)

இவ்வூரில், விழாவன்று, முக்கிய வீதிகளில் கொடியேற்றி, கழகத் தோழர்களின் இல்லங்களிலும் கொடி பறக்கவிடப்பட்டது.

கடலங்குடி

வேலாயுத மன்றத்தின் சார்பில், மாலை 5 மணிக்கு ஊர்வலமும், தோழர் என். சந்திரசேகரம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி.நாராயணசாமி, ஜெ. ஜெயராமன், பி. என். சபேசன், என். சி. ராமதாஸ், பி. அரங்கநாதன், ஆர். பாலகிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய்

தி. மு. கழகச் சார்பில், பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் தாராவி வாழைக் கட்டவாடி மைதானத்தில் மாலை 7 மணியளவில் தோழர் எ என் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் செல்வ இரா. இளம்வழுதி வரவேற்புரை ஆற்றினார். தோழர்கள் எஸ். என். செழியன், உ. அ செல்லையா, குறள்தாசன், எ. எல். பெருமாள் த. மு. பொற்கோ, அரிபசங்கரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

• • •

பம்பாய் உரிமை வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக, வள்ளுவர் படிப்பகத்தில் மாலை 6-மணிக்கு தோழர் ஏ ராமன் தலைமையில் கொண்டாடப்பட்டது. அதுசமயம், தோழர்கள் எம். பிரகாசம், பி தேவஅன்பு, கே. கே. குமார், கோ. அப்புக்குட்டி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கீழப்பாவூர்

இவ்வூர், தி. மு. கழக சார்பில் காலை 9 மணிக்கு நகரின் 11 வீதிகளில் கொடி ஏற்றப்பட்டது. இரவு 8 மணிக்கு, தோழர் எஸ். இலக்குமணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: வே. சிவபெருமாள், பி. ஆர். வைகுண்டம், அரு இராமநாதன், ஜே பி. மணி, ராஜா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பி. ஆர் சிவன் அவர்களால் இனிப்பு வழங்கப்பட்டது.

கோளர்பாக்கம்

திருவள்ளுவர் மன்ற நிலையத்தில், தோழர் கே. ஏ. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில், தமிழின் பெருமை பற்றியும், தமிழின் இனிமை பற்றியும் தோழர்கள் சண்முகசுந்திரன், வெங்கடேசன், சொக்கலிங்கம் கண்ணையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

காதக்கோட்டை

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், ப. பி. சுந்தரம் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் கே. என் சின்னமுத்துசாமி, கே. என் பொன்னுசாமி, கே. என் கண்ணுசாமி. கே. என். சடையப்பன் ஆகியோர் பேசிய பின், தலைவர் நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிந்தது.

மேலச்சின்னணம்பட்டி

இவ்வூரில், தி. மு. கழகச் சார்பில், விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கழகக் கொடித் தோரணங்கள் எங்கும் கட்டப்பட்டன. இனிப்பு பண்டங்கள் வழங்கப்பட்டன. அதுபோது, பின்கண்டவாறு புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது: செயலாளர்: வி. பி. சாமி; துணைச் செயலாளர். கே பி பி. சாமி; பொருளாளர். எஸ். பி. பி. சாமி; வி. உறுப்பினர்: எஸ். கே. சாமி; மாவட்டப் பிரதிநிதி: கே. சாமிநாதன்.

நாவலர் பாரதியார் — ‘கணக்காயர்’ ஆனர்

அவர் உள்ளப்பாங்கை டாக்டர் சிதம்பரநாதனர் தீட்டிக் காட்டுகிருர்

மதுரை, ஜன. 17—

பசுமலை நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னுடையை போர்த்திப் பாராட்டும் விழா, தோழர் கருமுத்து தியாகராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரு. மீ. கந்தசாமி அனைவரையும் வரவேற்ருர்.

மதுரை ஆதீனத்தின் சார்பாக திரு. வீர. சிவசுப்பிரமணியம், திரு. சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னுடை போர்த்தினர்.

புது மண்டபம் மணி பதிப்பகம், அறிவியக்க மன்றம், மதுரைத் திருவள்ளுவர் கழக மாணவர்கள், திருச்சி சிந்தாமணி வான்தமிழ் நிலயம், மதுரைத் தொல்காப்பியர் மன்றம், அர்ச் மரியன்னை உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர்கள், ஐக்கிய கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் ஆகியோர் சார்பாக மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

மதுரைத் திருவள்ளுவர் கழகச் சார்பில் பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக் கோனர். “கணக்காயர்” என்ற பட்டத்தை அவருக்கு வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“இதுவரை எந்தப் புலவருக்கும் செய்யப்படாத வகையில் சிறப்பு செய்யப்பட்டிருக்கிறது; திருக்குறள் நெறி சான்ற கழகத்தார், “கணக்காயர்” என்ற பட்டத்தை வழங்குகின்ருர்கள்; ‘கணக்காயர்’ என்பது தமிழ் நூல் ஆராய்ச்சியாளருக்குச் சூட்டப்படுவது; கணக்கப்பிள்ளை என்ற பொருளல்ல; மிகச் சிறந்த நூலுக்குக் கணக்கு என்று பெயர்; அந்த நூலாராய்ச்சித் திறன் மிக்க, அந்த நூல்களைப் பிறர்க்குப் போதிக்கும் ஆற்றல் மிக்கவர்க்கு அளிக்கப்படும் பட்டம். ‘நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே’ என்ற நக்கீரரின் தந்தையார்க்குக் கணக்காயர் என்ற பெயர்

“உண்மையை நாட்டுதலில் எத்தகைய அழிவும், நட்டமும் வந்தாலும், அவைகட்கு ஒரு சிறிதும் அஞ்சாத நிலை காட்டியவர் பாரதியார். இதில் நக்கீரருக்கு அடுத்தபடியாக போற்றப்படுபவர் நாவலர் பாரதியார்”

தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும், இலங்கை முதலிய இடங்களிலிருந்தும் பல அறிஞர் பெருமக்கள் அனுப்பியிருந்த வாழ்த்து பாமாலைகளைக் கழகத் தலைவர் திரு கி. பழனியப்பன், வாசித்துக் காட்டினர்.

திரு. தி. கி. சுந்தரமூர்த்தி, நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார் மீது போற்றுதல் பாடல் பாடினர்.

திரு. கா. இராமையா பிள்ளை, நாவலர் பாரதியாரைப் பாராட்டிப் பேசுகையில், நாவலர் பாரதியார், வெல்லுஞ்சொல் இன்மை அறிந்துசொல்லும் திறன் வாய்ந்தவர் என்றும், பாரதியாரின் தமிழ்த் தொண்டுகளைக் கூறியும், ஆராய்ச்சித் திறனை விளக்கியும், பாரதியாருக்குச் செய்தபெருமை தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கே செய்ததாகுமென்றும் கூறினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் பாராட்டுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

“திருவள்ளுவர் உள்ளத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து கூறியவர் நாவலர் பாரதியாரே ஆவர்.

“தமிழுக்கு உழு தொழிலே சிறந்த தொழில் என்று நந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன; ஆனால் வடமொழி நூல்களில், உழு தொழில் இழித்துரைக்கப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டினர் — நாவலர் பாரதியார்!

ஒரு சாதிக்கொரு நீதி என்ற முறையில், மனுதரும சாத்திரம் இருப்பதை எடுத்துக் காட்டி, திருக்குறள், மனுதர்ம சாத்திரத்தைப் பார்த்து எழுதப்பட்டதல்ல என்று அவர் கூறியுள்ளார்.

“கௌடில்யர் அர்த்த சாத்திரத்தைப் பார்த்தபின்னர் திருக்குறள் எழுந்ததென்ற கூற்றை பாரதியார் மறுத்துள்ளார். கௌடில்யர் அர்த்த சாத்திரம் சாதி அடிப்படையில் தர்மத்தை விதித்திருப்பதும், திருக்குறளில் சாதி அடிப்படையில் அறம் அமைக்கப்படவில்லை என்பதையும் விளக்கிக் கூறியுள்ளார்.

“திருக்குறளில் கூறப்படும் அறங்கள் வடமொழி நூலிலிருந்து வந்தவையல்ல என்று வெளிப்படையாக நாவலர் பாரதியார் கூறினர். இதையே ஒரு ஆங்கில புலவர் எழுதி நோபல் பரிசு பெற்றர். ஆனால் நாவலர் பாரதியாருக்குக் கிடைத்த பரிசு டாக்டர் உ. வே. சாமிநாதய்யரின் பாராட்டுதான்.

“அறத்திலே, நீதி ஒரு பகுதி; ஆனால் நீதியில் அறம் ஒரு பகுதியாகாது” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

“பாரதியார் வழியிலே இன்று பல மாணவர்களை அவருடைய மாணவர்கள் பயிற்றுவிக்கின்றனர்.

“தொல்காப்பியத்திற்குப் பாரதியார் கண்ட உரை, எல்லோராலும் பாராட்டப்படுகின்றது; அரசியல் மொழி தமிழாக வேண்டும்; அரசியல் மொழி தமிழாகவில்லை என்றால் தமிழுக்கு வாழ்வில்லை

“எஞ்சிய சென்னை மாகாணம் என்று சொல்லப்படுகிற இந்தத் தமிழ் நாட்டில், தமிழ் மொழி வாராது போனால், இன்னும் 10, 11 ஆண்டுகளில் தானாக இந்தி மொழி அரசியல் மொழியாகி விடும். இந்தி, அரசியல் மொழியாகிவிடுமானால் ஒவ்வொருவரும் கட்டாயம் இந்தி கற்கும்படியேற்படும்.

“இந்தி, சமஸ்கிருதமெல்லாம் பொது மொழியாக வேண்டுமென்று சொல்வதையெல்லாம் கேட்டுத் தமிழினம் வாளாயிருக்கிறதே என்று கண்ணீர் வடித்தார் பாரதியார்.”

பாராட்டுக்குப் பதிலளித்து நாவலர் திரு ச. சோமசுந்தர பாரதியார் பேசுகையில் கூறியதாவது:—

“இன்று நீங்கள் செய்த பெருமை எனக்கல்ல; இந்நாள், தமிழன்பை நாங்கள் அறவே ஒழித்துவிடவில்லை என்பதை உலகுக்குத் தெரிவிக்கும் நாள்.

“இந்த மதுரையிலே, சங்கமிருந்த தலைநகரிலே, இன்னும், பண்டைத் தமிழுணர்ச்சி மறைந்துவிடவில்லை என்பதையே இவ்விழா காட்டுகிறது.

“என்னால் இயன்றவரை உங்கள் தொண்டனாக வாழ்ந்து என் கடமைகளைச் செய்து கொண்டேயிருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.”

கழகக் கூட்டங்கள்

★

மூலக்கொத்தளம்

23—1—54 மாலை 5 மணிக்கு

இடம்: தெப்பக்குளம் மைதானம்

தலைவர்: எஸ். பி. வானமாமலை

பேசுவோர்:

குடந்தை வை. வீழிநாதன்

பழநி மா. மாணிக்கம்

★

பெங்களூர்

(பொங்கல் விழா)

24—1—54 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

இடம்: R. B. A. N. M's உயர்நிலைப் பள்ளி மைதானம்

தலைவர்:

தண். கி. வெங்கடாசலனர்

பேசுவோர்:

ப. உ. சண்முகம்

கு. மு. அண்ணல் தங்கோ

★

திருப்பூர்

25—1—54 திங்கள் மாலை 6-30 மணிக்கு

இடம்: வள்ளுவர் திடல் (ரேடியோ மைதானம்)

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

ஈரோடு மாநாடுகள்

ஈரோடு, ஜன. 20—

இங்குள்ள பெரியார் திடலில், இம்மாதம் 23, 24-ந் தேதிகளில் இரண்டு மாநாடுகள் நடைபெறவிருக்கின்றன. 23-ந் தேதி சனிக்கிழமை புத்தர் கொள்கை பிரசார மாநாடு நடைபெறும்; அம்மாநாட்டிற்கு இலங்கை உலக புத்த ஐக்கிய சபைத் தலைவர் டாக்டர் ஜி. டி. மல்லலசேகரா தலைமை தாங்குவார்; பூனாவைச் சேர்ந்தவரும், எல்லா இந்திய தாழ்த்தப்பட்ட மக்கள் சங்கச் செயலாளருமான பி. என். ராஜ்போஜ் எம். பி. மாநாட்டுத் திறப்பு விழா நடத்துவார். திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராக இருப்பார்.

இரண்டாவது மாநாடான புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு 24-ந் தேதி ஞாயிறு அன்று நடைபெறும் அம்மாநாட்டிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம், எம். ஏ., பி. எல். டி. தலைமை வகிப்பார் தோழர் எஸ். பி ஆதித்தன், பார்-அட்-லா, மாநாட்டுத் திறப்பு விழா நடத்துவார். தோழர் என் குருசாமி, பி ஏ, அவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராக இருப்பார்.

இந்த இரண்டு மாநாடுகளையும் பெரியார் ஈ. வெ. ரா. நடத்துகிருர்.

பாசனத்திற்கு நீர் இறைக்க காற்று

சென்னை, ஜன. 18—

பாசனத்திற்கு நீர் இறைக்க காற்றைப் பயன்படுத்த முடியுமா என்பது பற்றி, விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கௌன்சில் சென்னை உள்பட பல இடங்களில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

[illegible] கோட்டூர்புரத்தில் திரு. வி. க. நிலைய மண்டப நிதிக்கு ரூ 100—14—1 வசூலாகியது திருமதி புஷ்பம் [illegible] ஒரு தங்க மோதிரத்தை அளித்து, மாதர்களின் சார்பாக ரூ 1000 நிதி திரட்டித் தருவதாகக் கூறியுள்ளார்.

தி. மு. கழகத் துவக்க விழா

★

திருப்புக்குழி

22—1—54 மாலை 4 மணிக்கு, தி. மு. கழகத் துவக்க விழா தோழர் பி. எம். கருணாகரன் தலைமையில் செயற்குழுவும் கொடியேற்று விழாவும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் படத் திறப்பு விழாவும் நடைபெறும். அவ்வமயம், தோழர்கள் எல். வி. நடராசன், காஞ்சி-கல்யாணசுந்தரம், சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி-கே. டி. எஸ். மணி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

★

பாப்பநாயக்கன் பாளையம்

23—1—54 சனி மாலை 6 மணிக்கு

தலைவர்: இரா. வேணுகோபால்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

எஸ். ஆர். மாணிக்கம்

வைர-சுப்பிரமணியன்

★

படித்துறை

23—1—54 காலை 10 மணிக்கு

இடம்: ஈஸ்வரன் கோயில் திடல்

தலைவர்: எஸ். எம். லட்சுமி

திறப்பாளர்:

பழநி மா. மாணிக்கம்

பேசுவோர்:

குடந்தை வை. வீழிநாதன்

எஸ். பி வானமாமலை

கோ. வில்லவன்கோதை

வே. பரணன்

குறிப்பு:—அன்று இரவு 11 மணிக்கு கழகக் கட்டடத்தில், தோழர்கள் அண்ணாதுரை, அழகிரி ஆகியோர் படம் திறந்து வைக்கப்படும்.

சென்னை - ருயப்பேட்டை தி. மா. மு. கழகம்

சென்னை, ஜன. 19—

24-வது வட்டம் தி. மா. மு. கழக கூட்டம், தோழர் ஆர். டி அரசு தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மு பழனி; துணைச் செயலாளர்: கே. கி. வைரவ; பொருளாளர்: க சு மணி; செயற் குழு உறுப்பினர்கள்: வி கிருஷ்ணமூர்த்தி, வில்லியம், சத்தியானந்தம், செபவேலு, செல்வராஜ். பொங்கலை முன்னிட்டு பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தோழர் ஆர் டி. அரசு தலைமையில், தோழர்கள் மோகன சுந்தரம், காசிநாதன், பைரன், மு பழனி, சிதம்பரனுகன் ஆகியோர் பேசினர்.

தோழர்

பம்பாய் தெ. இ. திராவிட மகாஜன சங்கம்

12—1—54ல், தோழர் ஒ. த அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, சென்ற மாதச் செயல் குறிப்புகள், வருமானச் செலவு கணக்குகள், கடிதப் போக்குவரத்துகள், மற்றும் நிர்வாக சம்பந்தமான காரியங்கள் கவனிக்கப்பட்ட பின், சென்னை மாநிலத்தில் ஆட்சி மொழி தமிழ் மொழியாகவிருக்க வேண்டுமென்று கோரியும், இது சம்பந்தமாக சென்னை சட்ட மன்றத்தில் கொண்டுவரப் பெறும் தமிழ் ஆட்சி மொழி மசோதாவை ஆதரித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பிரிந்தால் வாழ முடியாதாம்!

‘திராவிட நாடு’ பற்றி வைத்தியநாதரும் குளறுகிருர்!

மதுரை, ஜன. 17—

“நாட்டுப் பிரிவினையை ஒரு சில கட்சிகள் விரும்புகின்றன. திராவிட இயக்கத்தார், திராவிட நாடு தனியாகப் பிரிய வேண்டுமென்கிருர்கள்; அவர்கள் விரும்புகிறபடி திராவிட நாடு தனியாகப் பிரிந்து விட்டால், அது தனித்து வாழ முடியாது. சுதந்திரத் தனி நாடாக எந்தச் சிறு நாடும் இருக்க முடியாது. கூட்டாகப் பெரிய நாடாக இருந்தால்தான் தனியாக வாழ முடியும்.”

இவ்வாறு தோழர் ஏ. வைத்தியநாதய்யர், மதுரை தமிழரசுக் கழக மூன்றாவது ஆண்டு விழாக் கூட்டத்தில், சி. இராசகோபாலாச்சாரியாரின் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிங்கப்பூருக்குக் கப்பல் தபால்

சென்னை, ஜன. 19—

‘எஸ். எஸ். ஜலகோபால்’ என்னும் கப்பல் சென்னையிலிருந்து, இம்மாதம் 24-ந் தேதி யன்று சிங்கப்பூருக்குப் புறப்படும். நகரத்திலுள்ள தபால் நிலையங்களில் 23-ந் தேதி காலை 10 மணிக்கு முன்னும், ஜெனரல் தபால் நிலயத்தில் அன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னும் போடப்படும் தபால்கள் அக்கப்பலில் சேரும்.

இது நீதியா?

கடந்த ஜூலை 15-ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து, ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவித்துத் திரும்பிய கொமாரபாளையம் தோழர்களான ராமராஜன், கா. மாரியப்பன், பழனியப்பன், மாவடித்துரை ஆகியவர்களுக்கு தற்பொழுது, கோவை, ரயில்வே மாஜிஸ்திரேட் அவர்களிடமிருந்து (போலீஸ் மூலமாக) ரூ. 30 அபராதம் கட்ட வேண்டும் என்றும், இல்லையேல், ஜப்தி செய்து பெற்றுக் கொள்ளப்படும் என்று வாரண்ட் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

ரூ. 70 கோடி செலவில் எஃகு தொழிற்சாலை

கல்கத்தா, ஜன. 20—

இந்தியாவில் ஜெர்மன் நிபுணர்கள் ரூ 70 கோடி செலவில் கட்டவிருக்கும் புது எஃகு தொழிற்சாலையை நிர்மாணிக்கும் இடம் தான் இன்னும் நிச்சயமாகவில்லை.

திருமணம்

22—1—54 வெள்ளி காலை 9-30 மணிக்கு தோழர் மதுரமுத்தவுக்கும், தோழியர் சவுந்திர கோகிலத்திற்கும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் சென்னை சவுகார் பேட்டை சுந்திரப்ப முதலி தெரு, 16. எ. எண்ணுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும். ‘நம் நாடு’ பொறுப்பாளர் அ. பொன்னம்பலனர் பேசுவார். மாலையில் இன்னிசை நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத் அக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.